செ. கு. எண்: 197 நாள் :22.12.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 2.12.2015 அன்று சென்னை, சைதாப்பேட்டை பகுதியைச் சேர்ந்த திரு. சேகர் என்பவரின் மகன் தியாகராஜன்; திரு. மாதவபிள்ளை என்பவரின் மகன் ஆதிமூலம்; திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பாஞ்சாலை கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னகோபால் என்பவரின் மகன் மணிகண்டன்; கும்மிடிப்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. அப்துல்லா என்பவரின் மகன் யூசுப்;

4.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜகோபால் என்பவரின் மனைவி ஊரம்மாள்;

6.12.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தவணி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிலம்பரசன் என்பவரின் மகள் நித்தியா;

8.12.2015 அன்று கலசபாக்கம் வட்டம், பெரிய காலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுரேஷ் என்பவரின் மகன் சஞ்சய்;

9.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆலாடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பார்த்தசாரதி என்பவரின் மகன் பரத்;

——ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

7.12.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஆச்சமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுரங்கம் என்பவரின் மனைவி சின்னக்குழந்தை;

13.12.2015 அன்று தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், கடம்பங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்பவரின் மனைவி கனகவல்லி; திரு. ரெங்கராஜ் என்பவரின் மனைவி இளவரசி என்கிற முத்தமிழ்செல்வி;

--- ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

18.12.2015 அன்று பொன்னேரி வட்டம், சீமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகன் மதன்குமார் பாலத்தை கடக்க முயன்ற போது ஆற்றில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **12** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**